தேதி: 19.01.2023

அ.வ.எண்.129/2017

வா.சா.1 லட்சுமி

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் யாரிடம் பூமியை வாங்கினேன் என்றால் ராமவளையனிடமிருந்து வாங்கினேன். மேற்படி ராமவளையன் எனக்கு பூமியை கொடுக்கும்போது செக்குப்பந்தி போட்டு பூமிக்கு தடம் குறிப்பிட்டு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது பூமி எந்த காலையில் உள்ளது என்று கேட்டால் காலை 43 ஆகும். நான் வாங்கிய ராமபோயனிடமிருந்துதான் வள்ளியம்மாள் என்பவரும் பூமி வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என் பூமிக்கு கிழபுறமாக வாங்கியுள்ளார்.

2. வள்ளியம்மாளுக்கு கொடுத்த பூமிக்கு தடம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. தாராபுரம் ரோட்டிலிருந்து கிழக்கோட்டில் தென்வடலாக காலை 505 ல் உள்ள வழியாக காலை எண் 43 க்கு தடம் உள்ளது. பி.ஏ.பி வாய்க்கால் வரை அந்த தடம் உள்ளது. வள்ளியம்மாள் பூமியில் குடிசை உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய பூமியில் உள்ளது. தடம் எப்படி உள்ளது என்றால் சுத்தாமாக உள்ளது.

3. பிரதிவாதிகளின் பூமி எந்த காலையில் உள்ளது என்றால் 505 காலையில் உள்ளது. எங்களுக்கு தடம் எங்களுக்கு எழுதிக்கொடுத்த நபரிடம் தான் கேட்க வேண்டும் என்றும், காலை எண் 545 ல் கேட்க முடியாது என்றால் சரியல்ல. எனக்கு 545 ல் தடம் இல்லை என்றும், 543 காலையில் தான் தடம் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த நபரிடம் தான் தடம் கேட்கு முடியும் என்றும் காலை எண். 545 ல் தடம் கேட்க முடியாது என்றால் தடம் உள்ளது. அதில் 9 பேருக்கு உரிமை உள்ளது. மேற்படி 9 நபர்களை வழக்கில் சேர்க்காமல் பிரதிவாதிகள் மீது மட்டும் எதற்காக வழக்கு போட்டுள்ளேன்

என்றால் பிரதிவாதிகள் தான் இடையூறு செய்தார்கள். காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது எழுதிவாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டார்கள்.

**1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

**ஒப்பம். /- எஸ்.வடிவேல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)

பல்லடம்.

**ஒப்பம்./- லட்சுமி,**